# ஈரோடு மாநகராட்சி
# மாமன்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகள்
# திருவள்ளுவராண்டு 2044 தைத் திங்கள் 17–ம் நாள்

2013–ம் ஆண்டு ஜனவரி மாதம் 30–ஆம் தேதி (30.01.2013) புதன் கிழமை காலை 11.15 மணிக்கு மாமன்ற கூட்ட அரங்கில் நடைபெற்ற மாமன்ற அவசர கூட்ட நடவடிக்கைகள்.

– – –

## கூட்ட நடவடிக்கைகள்

**வணக்கத்திற்குரிய மேயர், மரியாதைக்குரிய துணை மேயர், மண்டலத் தலைவர்கள் மற்றும் மாமன்ற உறுப்பினர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம்.**

ஈரோடு மாநகராட்சியில் 6.48 கோடி ரூபாய் செலவில் புதியதாக கட்டப்பட்டுள்ள மாமன்றக் கூடத்துடன் கூடிய அலுவலகம் மற்றும் துப்புரவு பணியாளர்களுக்காக ரூ.76.50 இலட்சம் மதிப்பீட்டில் 12 அடுக்குமாடி குடியிருப்புகளை திறந்து வைத்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு இம்மாமன்றம் தனது பாராட்டுதல்களையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறது.

**377. வணக்கத்திற்குரிய மேயர் முன்மொழிய மரியாதைக்குரிய துணைமேயர் வழிமொழிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**

1) 27. ஈரோடு மாநகராட்சி பகுதியில் திடக்கழிவுகளை உருவாக்கும் நிறுவனங்களை முறைப்படுத்தி கழிவுகளை சேகரிக்கவும், அவற்றினால் ஏற்படும் அதிக அளவிலான கழிவுகளை கையாளுவதற்கு மாநகராட்சிக்கு ஏற்படும் செலவினங்களை குறைத்திடவும், மாநகராட்சி பகுதியினை தூய்மையாக வைத்திடவும் கீழ்க்கண்டவாறு நிறுவனங்களிடம் நிர்வாகக் கட்டணம் வசூல் செய்து மாநகராட்சி மூலமாக திடக்கழிவுகளை அகற்ற நடவடிக்கை மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண். | நிறுவனத்தின் தன்மை | நிர்வாகக் கட்டணம் ஒவ்வொரு மாதத்திற்கும் ரூ. |
|---|---|---|
| 1. | பேக்கரி | 500.00 |
| 2. | டிபன் ஸ்டால் | 500.00 |
| 3. | மெஸ் | 1000.00 |
| 4. | உணவு விடுதி | 2000.00 |
| 5. | உணவுடன் கூடிய தங்கும் விடுதி | 3000.00 |
| 6. | குளிர்பானம் மற்றும் பழச்சாறு கடைகள் | 1000.00 |
| 7. | காய்கறிகள் மற்றும் பழமுதிர் நிலையங்கள் | 3000.00 |
| 8. | டிபார்ட்மெண்டல் ஸ்டோர்ஸ் | 2000.00 |
| 9. | இதர நிறுவனங்கள் (நிபந்தனைக்குட்பட்டு) | 2000.00 |

அலுவலகக் குறிப்பு-

மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**எச்1/5043/12**

**378.** மாநகராட்சி பகுதியில் உருவாகும் திடக்கழிவுகளை மாநகராட்சி மூலமாக அகற்றுவதற்கு சம்மந்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்து கீழ்கண்டவாறு ஒவ்வொரு மாதமும் நிர்வாகக் கட்டணம் வசூல் செய்ய தீர்மானிக்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| 1. | பேக்கரி | 300.00 |
| 2. | அடுமனை வைத்து பேக்கரி தயாரிப்பது | 500.00 |
| 3. | டிபன் ஸ்டால் | 300.00 |
| 4. | மெஸ் | 500.00 |
| 5. | உணவு விடுதி | 1000.00 |
| 6. | உணவுடன் கூடிய தங்கும் விடுதி | 3000.00 |
| 7. | குளிர்பானம் மற்றும் பழச்சாறு கடைகள் | 500.00 |
| 8. | பெரிய காய்கறி கடைகள் மற்றும் பழமுதிர்நிலையங்கள் | 3000.00 |
| 9. | சிறிய காய்கறி கடைகள் மற்றும் பழமுதிர் நிலையங்கள் (16'x16') | 500.00 |
| 10. | டிபார்ட்மெண்டல் ஸ்டோர் | 3000.00 |
| 11. | சிறிய மளிகைக்கடை | 300.00 |
| 12. | இதர நிறுவனங்கள் (நிபந்தனைக்குட்பட்டு) | 2000.00 |
| 13. | Hardware Stores பெரியது | 750.00 |
| 14. | Hardware Stores சிறியது | 250.00 |

**2)** ஈரோடு மாநகராட்சிக்கு சொந்தமான பன்னீர்செல்வம் பூங்காவினை தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மூலம் இலவசமாக பராமரிப்பு செய்தல் பணிக்கு தினசரி நாளிதழில் விளம்பரம் செய்ய வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் 27.11.2012-ல் முன்அனுமதி வழங்கியுள்ளார்கள். அதன்படி பன்னீர்செல்வம் பூங்காவினை தன்னார்வ தொண்டு நிறுவனத்தார்கள் இலவசமாக பராமரிப்பு செய்து தருமாறு தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டதில், கீழ்க்கண்ட இரு நிறுவனத்தார்கள் இலவசமாக பராமரிப்பு செய்து தருவதற்கு அனுமதி கோரியுள்ளார்கள். அதன் விவரம் பின்வருமாறு:

(1) பசுமை உலகம், ஈரோடு நிறுவனத்தார் தமது 13.12.12-ம் தேதிய கடிதத்தில் கடந்த 12 ஆண்டுகளாக பல்வேறு சமூக நற்பணிகளை செய்து வரும் அமைப்பாக உள்ளதாகவும், பன்னீர் செல்வம் பூங்காவினை சிறு விளம்பரம் மூலம் இலவசமாக பராமரிக்க அனுமதி வழங்குமாறு கோரியுள்ளனர்.

(2) திருவாளர்கள். எஸ்.ஆர்.பி. அன் கோ ., ஒப்பந்ததாரர், ஈரோடு அவர்கள் மேற்கண்ட பன்னீர் செல்வம் பூங்காவில் உள்ள நீர்வீழ்ச்சி தங்கள் நிறுவனம் மூலம் அமைக்கப்பட்டது எனவும், மேற்படி மலைக்குன்றின் உடைந்த பகுதிகள், வண்ணப்பூச்சு, ஒளி அமைப்பு மற்றும் தண்ணீர் கொட்டும் அமைப்பு முதலியவைகளை தமது சொந்த பொறுப்பில் மாற்றி அமைத்து பராமரிப்பு செய்து தருவதாகவும், மேலும் மேற்கண்ட அமைப்பில் மர இலைகள் தினமும் காய்ந்து தண்ணீர் செல்லும் பாதையில் அடைப்பு ஏற்படும் பொழுது, மேற்கண்ட அடைப்புகளை தினமும் சுத்தம் செய்து மின் ஒளி அமைத்து, மின்மோட்டார் இயக்கம் செய்து நீர்வீழ்ச்சியினை நல்ல முறையில் இயக்கி தருவதாகவும் தெரிவித்துள்ளனர். மேலும் பன்னீர் செல்வம் பூங்காவினை ஏற்கனவே ஓராண்டு காலத்திற்கு இலவசமாக பராமரிப்பு செய்து கொடுத்துள்ளோம் எனவும் தற்போது மேற்கண்ட நீர்வீழ்ச்சி மற்றும் பூங்காவின் அமைப்பு விவரங்கள் முழுவதும் நன்றாக தெரியும் என்பதால் சிறு விளம்பரம் அமைத்து அதன்மூலம் பன்னீர் செல்வம் பூங்காவினை இலவசமாக பராமரிப்பு செய்து தருவதாகவும் தெரிவித்துள்ளனர்.

மேற்கண்ட இரண்டு நிறுவனத்தார்களில் பன்னீர்செல்வம் பூங்காவில் உள்ள நீர்வீழ்ச்சியினை அமைத்துக் கொடுத்து மேலும் ஓராண்டு காலம் இலவச பராமரிப்பு செய்து கொடுத்த திருவாளர்கள். எஸ்.ஆர்.பி. அன் கோ., ஈரோடு நிறுவனத்தாருக்கு நீர்வீழ்ச்சியின் பராமரிப்பு விவரங்கள் அனைத்தும் தெரிந்துள்ளதாலும், இப்பூங்காவினை பராமரிப்பதற்கென போதிய பணியாளர்கள் மாநகராட்சி வசம் இல்லாத காரணத்தாலும், மூன்று ஆண்டுகளுக்கு

மட்டும் கீழ்கண்டுள்ள மாநகராட்சி நிபந்தனைகளுக்குட்பட்டு திருவாளர்கள். எஸ்.ஆர்.பி. அன் கோ., ஈரோடு நிறுவனத்தார் சிறு விளம்பரத்தின் மூலம் பன்னீர்செல்வம் பூங்காவினை இலவசமாக பராமரிப்பு செய்து கொடுப்பதற்கு அனுமதி வழங்குவதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**நிபந்தனைகள்:**

1. பன்னீர்செல்வம் பூங்கா பொதுமக்களின் உபயோகத்திற்கு மட்டுமே பயன்படுத்தப்படல் வேண்டும்.
2. சட்டவிரோதமான காரியங்கள் எதுவும் நடைபெற கண்டிப்பாக அனுமதிக்கக்கூடாது
3. பூங்காவினுள் மாநகராட்சியின் அனுமதியின்றி எவ்வித கட்டிடங்களும் அமைக்கக்கூடாது.
4. பூங்காவினை பராமரிப்பது தொடர்பாக மாநகராட்சி/அரசு நிர்வாகம் அவ்வப்போது வகுக்கும் விதிமுறைகளுக்கும் ஆலோசனைகளுக்கும் கட்டுப்படல் வேண்டும்.
5. பூங்காவினுள் ஏதேனும் சேதாரங்கள் ஏற்படின் அதற்கு முழுப்பொறுப்பேற்று சரி செய்து தரப்படல் வேண்டும்.
6. பூங்காவினுள் பணியாற்றும் பணியாளர்களுக்கு பணியின்போது ஏதேனும் அசம்பாவிதங்கள் ஏற்படின் மாநகராட்சி எவ்விதத்திலும் பொறுப்பேற்காது.
7. பொதுமக்களுக்கு எவ்வித இடையூறுமின்றி நல்ல முறையில் பூங்காவினை பராமரிக்கப்படல் வேண்டும்.
8. பொதுமக்கள் பூங்காவினை பார்வையிட ஏதுவாக தினசரி (அரசு விடுமுறை மற்றும் ஞாயிற்றுக்கிழமை உட்பட) பராமரிப்பு மேற்கொள்ளப்படல் வேண்டும்.
9. பூங்காவினை பராமரிக்கும் காலத்தில் மின் கட்டணத்தினை மாநகராட்சியின் மூலம் செலுத்தப்படும்.
10. பூங்காவினை உபயோகப்படுத்தும் பொதுமக்கள் புகார் ஏதும் தெரிவிக்க வேண்டின் புகார் புத்தகம் ஒன்று பராமரிக்கப்படல் வேண்டும்.
11. பிற்காலத்தில் பூங்காவினை தாங்கள் எந்த சூழ்நிலையிலும் சொந்தம் கொண்டாட உரிமை கோரக்கூடாது.
12. பூங்கா பராமரிக்கும் பணி மூன்றாண்டு காலம் முடிவடைவதற்கு மூன்று மாதங்களுக்கு முன்பாக இலவச பராமரிப்பு பணி முடியும் விவரத்தினை மாநகராட்சி அலுவலகத்திற்கு எழுத்து மூலம் தெரிவிக்கப்படல் வேண்டும்.
13. பூங்கா பராமரிக்கும் பணியினை தங்களிடமிருந்து எந்த ஒரு காலத்திலும் யாதொரு முன் அறிவிப்புமின்றி ரத்து செய்ய ஆணையருக்கு முழு அதிகாரமுண்டு.

அலுவலகக் குறிப்பு–

1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

2. மேற்கண்ட பன்னீர்செல்வம் பூங்காவின் பராமரிப்பு பணிகளின் அவசர அவசியம் கருதி திருவாளர்கள். எஸ்.ஆர்.பி. அன் கோ., ஈரோடு அவர்கள் மாநகராட்சி நிபந்தனைகளுக்குட்பட்டு மூன்றாண்டுகளுக்கு இலவசமாக பராமரிப்பு செய்வதற்கு மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று அலுவக நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**இ1/10663/10**

**379. அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. பன்னீர்செல்வம் பூங்காவினை பராமரிக்கும் காலத்திற்குண்டான மின்கட்டணத்தை ஒப்பந்ததாரரே செலுத்த வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.**

**3)** நேதாஜி சாலை புதிய வணிக வளாகம் கடை எண்.17ஐ திரு. எஸ். எழில்குமார் என்பவருக்கு மூன்றாண்டுக்கு ஒப்படைக்கப்பட்டது. மேற்படி கடையை தொடர்ந்து நடத்த இயலாத காரணத்தால் வாடகை செலுத்த முடியவில்லை. எனவே கடையை 31.12.12 அன்றுடன் உரிமம் முடித்துக் கொண்டு மாநகராட்சி வசம் ஒப்படைப்பதாக தெரிவித்துள்ளார். மேற்படி கடைக்கு அன்னார் ஏல வைப்புத் தொகையாக ரூ.1,00,000/–ம் செலுத்தியுள்ளார். மேலும் மேற்படி கடைக்கு வாடகை ரூ.78,300/– செலுத்தப்பட வேண்டும். எனவே அன்னார் செலுத்த வேண்டிய வாடகை நிலுவைத் தொகை ரூ.78,300/–ஐ ஏலவைப்புத் தொகை ரூ.100000/–ல் சரி செய்து கொண்டு மீதம் உள்ள தொகை ரூ.21700/–ஐ பறிமுதல் செய்து மேற்படி கடை எண்.17ஐ அவசர அவசியம் கருதி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஏல நடவடிக்கை மேற்கொண்டதை மாமன்றத்தின் அங்கீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு–

மாமன்றம் அங்கீகரிக்கலாம்.

**அ1/4834/06**

**380. அங்கீகரிக்கப்பட்டது.**

**4)** ஈரோடு மாநகராட்சி மண்டலம்–1ல் ஆர்.என்.புதூர் துவக்கப்பள்ளி பழைய கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்தி புதியதாக வகுப்பறை கட்டுதல் பணி மேற்கொள்ள ரூ.25,00,000/–க்கு மாமன்றம் தனது தீர்மான எண்.313 நாள் 08.11.12ல் அனுமதி அளித்துள்ளதை தொடர்ந்து இப்பணிக்கு 18.12.12ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டும் பெறப்பட்டது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியினை மதிப்பீட்டு விலைவிகிதத்துடன் ஒப்புநோக்குகையில் திருவாளர்கள் எஸ்.வி. அண்டு கோ மதிப்பீட்டைக்காட்டிலும் (–0.001 சதவீதம்) குறைவானதான விலைவிகிதம் கொடுத்துள்ளார். மேலும் ஒப்பந்தப்புள்ளியுடன் 1 சதவீத டேவணித் தொகையினை மாநகராட்சி கருவூலகத்தில் வங்கி வரைவோலையாக செலுத்தியுள்ளார்.

திருவாளர்கள் எஸ்.வி. அண்டு கோ ஒப்பந்ததாரருக்கு மேலும் விலையை குறைத்துக் கொடுக்க இயலுமா என இவ்வலுவலக ந.க.எண்.5482/2012/இ1 நாள் 19.12.12ம் தேதியில் அறிவிப்பு கொடுக்கப்பட்டது. அதற்கு ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதாலும் மற்றும் கட்டிட பொருள் விலை ஏற்றம் மற்றும் வேலை ஆட்கள் கூலி ஏற்றத்தால் ஏற்கனவே கொடுத்துள்ள விலைவிகிதத்தை மேலும் குறைத்து கொடுக்க இயலாது என தனது 19.12.12ம் தேதிய கடிதத்தில் தெரிவித்துள்ளார். எனவே வரப்பெற்ற ஒரு ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட (–0.001 சதவீதம்) குறைவானதாக கொடுத்துள்ள திருவாளர்கள் எஸ்.வி. அண்டு கோ அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு–

1. மேற்படி பணிக்கு மதிப்பீட்டு விலை விகிதத்தைவிட (–0.001 சதவீதம்) குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருவாளர்கள் எஸ்.வி. அண்டு கோ அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**இ1/5482/1/12**

**381. அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**5)** ஈரோடு மாநகராட்சி மண்டலம்–1ல் ஜவுளி நகர் துவக்கப்பள்ளி புதியதாக வகுப்பறை கட்டுதல் பணி மேற்கொள்ள ரூ.20,00,000–க்கு மாமன்றம் தனது தீர்மான எண்.313 நாள் 08.11.12ல் அனுமதி அளித்துள்ளதை தொடர்ந்து இப்பணிக்கு 18.12.12ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டும் பெறப்பட்டது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியினை மதிப்பீட்டு விலைவிகிதத்துடன் ஒப்புநோக்குகையில் திருவாளர்கள் ஏ.ஆர்.கே. கன்ஸ்ட்ரக்சன்ஸ் மதிப்பீட்டைக்காட்டிலும் (–0.37 சதவீதம்) குறைவானதான விலைவிகிதம் கொடுத்துள்ளார். மேலும் ஒப்பந்தப்புள்ளியுடன் 1 சதவீத டேவணித் தொகையினை மாநகராட்சி கருவூலகத்தில் வங்கி வரைவோலையாக செலுத்தியுள்ளார்.

திருவாளர்கள் ஏ.ஆர்.கே கன்ஸ்ட்ரக்சன்ஸ் ஒப்பந்ததாரருக்கு மேலும் விலையை குறைத்துக் கொடுக்க இயலுமா என இவ்வலுவலக ந.க.எண்.5482/2012/இ1 நாள் 19.12.12ம் தேதியில் அறிவிப்பு கொடுக்கப்பட்டது. அதற்கு ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதாலும் மற்றும் கட்டிட பொருள் விலை ஏற்றம் மற்றும் வேலை ஆட்கள் கூலி ஏற்றத்தால் ஏற்கனவே கொடுத்துள்ள விலைவிகிதத்தை மேலும் குறைத்து கொடுக்க இயலாது என தனது 19.12.12ம் தேதிய கடிதத்தில் தெரிவித்துள்ளார். எனவே வரப்பெற்ற ஒரு ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட (–0.37 சதவீதம்) குறைவானதாக கொடுத்துள்ள திருவாளர்கள் ஏ.ஆர்.கே கன்ஸ்ட்ரக்சன்ஸ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு–

1. மேற்படி பணிக்கு மதிப்பீட்டு விலைவிகிதத்தை விட (–0.37 சதவீதம்) குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருவாளர்கள் ஏ.ஆர்.கே. கன்ஸ்ட்ரக்சன் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**இ1/5482/2/12**

**382. அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**6)** ஈரோடு (மேற்கு) சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் (2012-13) ஈரோடு மாநகராட்சி மண்டலம்–2க்குட்பட்ட வார்டு எண்.18 பெரியசேமூர் ராம்நகர் குறுக்கு வீதிகளுக்கு வடிகால் கட்டும் பணி செய்ய ரூ.6,00,000/-க்கு 28.12.2012-ம் தேதியன்று மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. இதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. இப்பணிக்கான டேவணித் தொகையை ஒப்பந்ததாரர்கள் பணமாக மாநகராட்சி கருவூலகத்தில் செலுத்தியுள்ளார். எனவே பெறப்பட்ட இரு ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு விலைவிகிதத்துடன் ஒப்புநோக்குகையில் பெறப்பட்ட விபரம் பின்வருமாறு

| | |
|---|---|
| திரு எம்.ராமகிருஷ்ணன் | 0.13% மதிப்பீட்டு விலைவிகிதத்தை விட குறைவு |
| திருமதி அமுதாகிருஷ்ணகுமார் | 0.01% மதிப்பீட்டு விலைவிகிதத்தை விட குறைவு |

எனவே மேற்படி பணிக்கு குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு எம்.ராமகிருஷ்ணன் (0.13% மதிப்பீட்டு விலைவிகிதத்தை விட குறைவு) அவர்களின் ஒப்பந்தப்புள்ளி ஏற்க மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர்

அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு–

1. அனுமதிக்கலாம்.

2. பணி திட்டப்பணியாக இருப்பதால் அவசர அவசியம் கருதி மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று திரு எம்.ராமகிருஷ்ணன் 0.13% மதிப்பீட்டு விலைவிகிதத்தை விட குறைவு அவர்களின் குறைவான ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி உத்திரவு வழங்கியமைக்கும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**இ1/3679/12**

**383. அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**7)** ஈரோடு மாநகராட்சி எல்லைக்குள் கட்டிடம் கட்டிக் கொள்ள அனுமதி கோரும் விண்ணப்பத்துடன் பழைய கட்டிட இடிபாடு பொருட்களை அகற்றுவதற்கான சேவை வரி 2007 முதல் 2011-12 முடிய உள்ள காலத்தில் வசூலிக்கப்பட்ட தொகையிலிருந்து 13% சேவைவரி ரூ.7,20,912/- மற்றும் அதற்குண்டான அபராத தொகை செலுத்துமாறும் உதவி ஆணையர் கலால் மற்றும் சுங்கவரி அலுவலர் அவர்களிடமிருந்து 13.09.2012-ந் தேதி கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி அறிவிப்பு உரிய காலத்தில் கிடைக்காமல் தாமதமாக கிடைக்கப்பெற்று மேற்படித் தொகைக்கான அபராத தொகை செலுத்துவதற்கு மேல்முறையீடு செய்து நேரில் ஆஜராகி உரிய பதில் அளிக்க திரு ஆர்.முரளீதரன், பி.காம், எப்.சி.ஏ பட்டயக்காளர் அவர்களை நியமிக்கவும், அதற்கு ஆகும் செலவுத் தொகையினை ஏற்கவும் மாமன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு–

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.

**இ3/4870/12**

**384. அனுமதி வழங்கப்பட்டது.**

**8)** தமிழ்நாடு குடிசைமாற்று வாரியம் கோயமுத்தூர் பிரிவு நிர்வாகம் பொறியாளர் தனது SCB/CBE DN/LA/12 நாள் 17.12.2012ஆம் தேதிய கடிதத்தில் ஈரோடு மாநகராட்சி ராஜாஜிபுரம் பகுதியில் ஆக்கிரமிப்பு செய்து குடியிருந்து வருபவர்களுக்கு ராஜீவ் அவாஸ் யோஜனா என்ற திட்டத்தில் வீடுகள் கட்ட உத்தேசித்திருப்பதாகவும் மேற்படி நகரளவு எண்.34 பகுதியில் உள்ள 0.275 ஹெக்டேர் பரப்புள்ள ஆக்கிரமிப்பு இடத்தை குடிசைமாற்று வாரியத்திற்கு நில உரிமை மாற்றம் செய்து கொடுக்குமாறும், மனைப்பிரிவு ஒப்புதல் மண் பரிசோதனை, மதிப்பீடு தயாரித்தல் போன்ற பணிகளுக்கு மேற்படி இடத்தில் முன் நுழைவு அனுமதி கொடுக்குமாறும் கோரப்பட்டுள்ளது.

ஏற்கனவே ஈரோடு மாவட்டத்தில் நடைபெறும் அனைத்து துறை பணிகள் குறித்து மாண்புமிகு வருவாய்துறை அமைச்சர் மற்றும் மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களால் 19.05.12 அன்று நடத்தப்பட்ட ஆய்வு கூட்ட நடவடிக்கையில் இராஜாஜிபுரம் இடத்தினை அப்பகுதி மக்களுக்கே வழங்க மாநகராட்சி மூலமாக தீர்மானம் நிறைவேற்ற மாண்புமிகு வருவாய்துறை அமைச்சர் அவர்களால் தெரிவிக்கப்பட்டதின் பேரில் இம்மாமன்ற தீர்மானம் எண்.135 நாள் 30.07.12-ல் இராஜாஜிபுரம் பகுதியில் மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் கடந்த 25

வருடங்களுக்கு மேலாக குடியிருந்து வருபவர்களுக்கு சலுகை வீதத்தில் நிலக்கிரயம் பெற்றுக் கொண்டு நிலஉரிமை மாற்றம் செய்ய அரசின் அனுமதி பெற தீர்மானிக்கப்பட்டுள்ளது. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.5)துறை அரசாணை (நிலை) எண்.25 நாள் 25.02.2000-யில் நகராட்சி மற்றும் மாநகராட்சி மன்றங்களுக்கு சொந்தமான பட்டா நிலங்களில் குடிசைகள் மூலமாக ஏற்கனவே ஆக்கிரமிப்புகள் செய்து பல ஆண்டுகள் இருக்குமெயானால் அத்தகைய நிலம் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்திற்கு மட்டும் தேவையெனில் அவ்வாரியத்திற்கு மனை ஒன்றிற்கு ரூ.10,000/- (ரூபாய் பத்தாயிரம்) என்ற சலுகை வீதத்தில் நிலக்கிரயம் பெற்றுக் கொண்டு நில உரிமை மாற்றம் செய்ய அனுமதி வழங்கலாம் என உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. எனவே நகரளவு எண்.34 வார்டு-சி பிளாக் எண்.14-ல் உள்ள ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட இராஜாஜிபுரம் பகுதியில் உள்ள சுமார் 68 செனட் பரப்புள்ள இடம் மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தை மேற்படி அரசாணைப்படி தமிழ்நாடு குடிசைமாற்று வாரியத்திற்கு நில உரிமை மாற்றம் செய்வதற்கு மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு—

இம்மாமன்ற தீர்மானம் 135 நாள் 30.07.12-ல் இராஜாஜிபுரம் பகுதியில் மாநகராட்சிக்குச் சொந்தமான இடத்தில் கடந்த 25 வருடங்களுக்கு மேலாக குடியிருந்து வருபவர்களுக்கு சலுகை வீதத்தில் நிலக்கிரயம் பெற்றுக் கொண்டு நில உரிமை மாற்றம் செய்ய அரசின் முன் அனுமதி பெற தீர்மானிக்கப்பட்டுள்ளது. மேஙற்படி அரசாணைப்படி தற்பொழுது தமிழ்நாடு குடிசைமாற்று வாரியத்திற்கு நில உரிமை மாற்றம் செய்ய அரசிற்கு முன்மொழிவு அனுப்ப மாமன்றத்தின் முடிவிற்கு வைக்கப்பட்டுள்ளது.

**இ3/3271/12**

**385. அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**9)** இம்மாநகராட்சி பகுதிகளில் பாதாள சாக்கடைத்திட்டப்பணிகள் 5 சிப்ப பணிகளாக பிரிக்கப்பட்டு அனைத்து சிப்பப்பணிகளும் நடைபெற்று வருகிறது. பாதாள சாக்கடைத்திட்டப்பணிகள் முழுமையாக முடிக்கப்பட்டு பழுதடைந்துள்ள சாலைகள் பொதுமக்களுக்கும் போக்குவரத்துக்கும் இடையூறாக இருப்பதால், உடனடியாக சீரமைப்பு செய்ய வேண்டியுள்ளது. சீரமைப்பு செய்யப்பட வேண்டிய சாலைகள் விபரம் பின்வருமாறு.

| வ. எண் | வேலையின் பெயர் | நீளம் கி.மீ | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் |
|---|---|---|---|
| 1 | வார்டு எண்.5 அருள் வேலவன் நகர் பகுதியில் பாதாள சாக்கடைப்பணி முடிக்கப்பட்ட பழுதடைந்த சாலையினை சீரமைத்தல் பணி | 0.487 | 21.00 |
| 2 | வார்டு எண்.5 அருள் வேலவன் நகர் மெயின் சாலை மற்றும் குறுக்கு வீதிகளில் பாதாள சாக்கடைப்பணி முடிக்கப்பட்ட பழுதடைந்த சாலையினை சீரமைத்தல் பணி | 0.820 | 39.70 |
| 3 | வார்டு எண்.21 முருகேசன் நகர் குறுக்கு சாலை (வீனஸ் நகர்-1) மற்றும் கீதா நகர் மெயின் சாலை பகுதியில் பாதாள சாக்கடைப்பணி முடிக்கப்பட்ட பழுதடைந்த சாலையினை சீரமைத்தல் பணி | 0.450 | 31.00 |

| | | | |
|---|---|---|---|
| 4 | வார்டு எண்.21 குமலன்குட்டை பள்ளி எதிரில் உள்ள பகுதியில் பாதாள சாக்கடைப்பணி முடிக்கப்பட்ட பழுதடைந்த சாலையினை சீரமைத்தல் பணி | 0.358 | 23.00 |
| 5 | வார்டு எண்.28 புது மஜீத்வீதி, நேதாஜி ரோடு சந்திப்பிலிருந்து காவேரி ரோடு வரை உள்ள பாதாள சாக்கடைப்பணி முடிக்கப்பட்ட பழுதடைந்த சாலையினை சீரமைத்தல் பணி | 0.340 | 25.00 |
| 6 | வார்டு எண்.35 பெருந்துறை மெயின்சாலை சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் முதல் பழையபாளையம் செல்லும் இணைப்புச்சாலை (வாய்க்கால் சாலை) பாதாள சாக்கடைப்பணி முடிக்கப்பட்ட மண் சாலையினை தார் சாலையாக அமைத்தல் பணி | 0.500 | 33.00 |
| 7 | வார்டு எண்.44 ராஜாகாடு-1ல் பாதாள சாக்கடைப்பணி முடிக்கப்பட்ட பழுதடைந்த சாலையினை சீரமைத்தல் பணி | 0.250 | 23.50 |
| 8 | வார்டு எண்.46 முத்துநகர் (Extension lay-out) பகுதிகளில் பாதாள சாக்கடைப்பணி முடிக்கப்பட்ட பழுதடைந்த சாலையினை சீரமைத்தல் பணி | 0.347 | 30.00 |
| 9 | பாரதிபாளையம் பகுதியில் பாதாள சாக்கடைப்பணி முடிக்கப்பட்ட பழுதடைந்த சாலையினை சீரமைத்தல் பணி | 0.350 | 21.50 |
| | **மொத்தம்** | **3.902** | **247.70** |

மேற்கண்ட சாலைகள் சீரமைப்பு செய்ய வேண்டியுள்ளதால் அதற்கான பணிக்கு ஏற்படும் உத்தேச செலவினம் ரூ.247.70 இலட்சத்தினை மாநகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்வதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு–

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட சாலை பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியதன் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் கோர அலுவலக நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**இ1/9993/11**

**386. அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**10)** ஈரோடு மாநகராட்சி மண்டலம்–3க்குட்பட்ட வார்டு எண்.45 நேதாஜி சாலையில் ஏற்கனவே உள்ள பழுதடைந்த ஆயுர்வேதிக் மருத்துவமனை கட்டிடத்தை அகற்றி புதிய ஆயுர்வேதிக் மருத்துவமனை கட்டுதல் பணிக்கு ரூ.12,00,000/-க்கு நிர்வாக அனுமதி வழங்கியதை தொடர்ந்து 13.12.2012 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் e-Tendering மூலமாக வரப்பெற்ற ஒரு ஒப்பந்தப்புள்ளி கீழ்கண்டவாறு பெறப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| ராசி கன்ஸ்ட்ரக்சன்<br>(திரு ஏ.மூர்த்தி) | 4.90% அதிகம் |

மேற்படி ஒப்பந்ததாரர் 1 சதவீதம் டேவணித்தொகையை மாநகராட்சியில் செலுத்தியுள்ளார்.

எனவே பெறப்பட்ட ஒரு ஒப்பந்தப்புள்ளியை மதிப்பீடு விலை விகிதத்துடன் ஒப்புநோக்கும் போது மதிப்பீட்டு தொகையை விட 4.90% அதிகமாக ஒப்பந்ததாரர் ராசி கன்ஸ்ட்ரக்சன் (திரு ஏ.மூர்த்தி) வழங்கியுள்ளார். மேற்படி ஒப்பந்ததாரருக்கு மேலும் விலையை குறைத்து கொடுக்க இவ்வலுவலக ந.க.எண்.இ1/2509/12 நாள் 14.12.2012-ம் தேதியில் அறிவிப்பு கொடுக்கப்பட்டது. ஒப்பந்ததாரர் தனது 10.01.2013-ம் தேதிய கடிதத்தில் விலையை குறைத்து கொடுத்து ஒப்பந்தப்புள்ளி படிவம் வரிசை எண்.1 முதல் 37 வரை உள்ள அனைத்து வகைகளுக்கும் விலையை குறைவாக கொடுத்துள்ளார். எனவே வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.01% குறைவாக உள்ள மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு–

1. இவ்வேலைக்கு வரப்பெற்ற ஒரு ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.01% குறைவானதாக உள்ள ராசி கன்ஸ்ட்ரக்சன் (திரு ஏ.மூர்த்தி) அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மாமன்றம் அனுமதிக்கலாம்.

2. பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியமைக்கும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**இ1/2509/12**

**387. அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

11) நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (மா.ந.2) துறை அரசு ஆணை (நிலை) எண்.78 நாள். 25.05.2008-ன்படியும், நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் தெளிவுரை ந.க.எண்.62795/2009/ஆர்.3 நாள். 08.01.10-ன்படியும், ஈரோடு மாநகராட்சிக்கு சொந்தமான ஓராண்டு உரிம இனங்களை 01.04.2013 முதல் 31.03.2016 முடிய மூன்றாண்டு காலத்திற்கு பொது ஏலத்தில் விடுவதற்கும், மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் கோரவும் தயாரிக்கப்பட்டுள்ள பொது மற்றும் சிறப்பு நிபந்தனைகள் அடங்கிய பொது ஏல அறிக்கை மாமன்றத்தின் பார்வைக்கும் அங்கீகாரத்திற்கும் வைக்கப்பட்டது. மாமன்றம் தீர்மானம் எண்.366 நாள். 27.12.2012-ல் வணக்கத்திற்குரிய மேயர், மரியாதைக்குரிய துணை மேயர் மற்றும் மண்டலத்தலைவர்கள் ஆகியோர் கொண்ட குழு அமைத்து மேற்படி குழுவின் பரிந்துரையின்பேரில் மறு பரிசீலணை செய்து மாமன்றத்திற்கு பொருள் கொண்டு வர தீர்மானிக்கப்பட்டது. அதன்படி மேற்படி குழு 21.01.2013-ந்தேதி கூடி கீழ்க்கண்டுள்ள பொது ஏல இனங்களின் ஏல வைப்பு தொகைகள் மற்றும் கட்டணங்களை திருத்தி அமைக்க பரிந்துரை செய்து அறிக்கை வழங்கியுள்ளது.

| ஏல இனம் | பொது ஏல அறிக்கையில் உள்ள விபரம் | | குழுவின் பரிந்துரைப்படி மாற்றம் செய்யப்பட வேண்டிய கட்டண விபரம் | |
|---|---|---|---|---|
| | ஒப்பந்தப்புள்ளிக்கு செலுத்த வேண்டிய | வங்கி உத்திரவாத | ஒப்பந்தப்புள்ளிக்கு செலுத்த | வங்கி உத்திரவாத |

| | வைப்புத் தொகை | சான்று அல்லது வரைவோலை | வேண்டிய வைப்புத் தொகை | சான்று அல்லது வரைவோலை |
|---|---|---|---|---|
| 4 | 25000 | 50000 | 5000 | 10000 |
| 26 | 50000 | 50000 | 10000 | 10000 |
| 29 | 10000 | 10000 | 3000 | 3000 |
| 30 | 50000 | 50000 | 10000 | 25000 |
| 31 | 15000 | 15000 | 5000 | 5000 |

II. தினசரி சந்தையில் வசூலிக்க வேண்டிய சந்தைக் கட்டணம் மற்றும் கடைகளுக்கான கட்டண விபரங்கள்.

| வ.எண். | பொது ஏல அறிக்கையில் உள்ள விபரம் | | குழுவின் பரிந்துரைப்படி மாற்றம் செய்யப்பட வேண்டிய கட்டண விபரம் |
|---|---|---|---|
| 1. | மோட்டார், மினி லாரியில் விற்பனைக்காக கொண்டு வரும் மூட்டை ஒன்றுக்கு | ரூ.2.00 | ரூ.1.50 |
| 2. | தலைச்சுமை, காய் கூடை, டின் | ரூ.10.00 | ரூ.7.00 |
| 3. | மூட்டை, டின்,சிப்பம், அல்லது கூடைக்கு | ரூ.2.00 | ரூ.1.50 |
| 4. | பழம், வாழைக்காய் கூடை அல்லது மூட்டை | ரூ.2.00 | ரூ.1.50 |
| 5. | வாழைத்தார் ஒன்றுக்கு | ரூ.2.00 | ரூ.1.50 |
| 6. | இலைக்கட்டு ஒன்றுக்கு | ரூ.2.00 | ரூ.1.50 |
| 7. | தக்காளி கூடை (ம) பெட்டி ஒன்றுக்கு | ரூ. 2.00 | ரூ.1.00 |
| 8. | மூட்டைக்கு | ரூ.10.00 | ரூ.7.00 |
| 9. | பூக்கூடை அல்லது பூக்குடலை ஒன்றுக்கு | ரூ.2.00 | ரூ.1.50 |
| VI | தள்ளுவண்டி ஒன்றுக்கு | ரூ.5.00 | ரூ.3.00 |
| VIII | காவேரி சாலை பக்கம் புதிதாக கட்டப்பட்டுள்ள 24 பழ அங்காடி கடை ஒன்றுக்கு | ரூ.50.00 | ரூ.25.00 |
| IX அ | புதிதாக கட்டப்பட்டுள்ள காய்கறிக்கடைகள் 174 கடைகள் ஒவ்வொன்றுக்கும் ஒருநாள் வாடகை | ரூ.30.00 | ரூ.22.00 |
| IX ஆ | தினசரி மார்க்கெட் வளாகத்திலுள்ள 4”x4” அளவுள்ள 533 கடைகள் கடை ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு | ரூ.20.00 | ரூ.16.00 |

தேங்காய் மற்றும் தக்காளி ஆகியவைகளை கொண்டு வரும் விவசாயிகளிடம் கட்டணம் இலவசமாகவும், வியாபாரிகளிடம் கட்டணம் வசூலித்துக் கொள்ளவும் முடிவு செய்யப்பட்டது.

III.ஈ.கே.எம்.அப்துல்கனி மார்க்கெட் மற்றும் சந்தைக்கான சிறப்பு நிபந்தனைகளில் சந்தையில் நுழையும் வாகனங்களுக்கு வசூலிக்க வேண்டிய சுங்க கட்டணம் விகித விபரம்

| | | பொது ஏல அறிக்கையில் நிர்ணயம் செய்யப்பட்டது | குழுவின் பரிந்துரைப்படி மாற்றம் செய்யப்பட வேண்டிய கட்டண விபரம் |
|---|---|---|---|
| 1 | இரட்டைமாட்டு வண்டி 1-க்கு பாரத்துடன் | ரூ.15.00 | ரூ.10.00 |
| 2 | இரட்டைமாட்டு வண்டி 1-க்கு பாரமில்லாமல் | ரூ.7.00 | ரூ.5.00 |
| 3 | ஒற்றை மாட்டு வண்டி 1-க்கு பாரத்துடன் | ரூ.10.00 | ரூ.5.00 |
| 4 | ஒற்றை மாட்டு வண்டி 1-க்கு பாரமில்லாமல் | ரூ.5.00 | ரூ.3.00 |
| 5 | கைவண்டி ஒன்றுக்கு பாரமில்லாமல் | ரூ.5.00 | ரூ.3.00 |

IV. பிராமண பெரிய அக்ரஹாரத்தில் உள்ள வாரச்சந்தை நடத்திக் கொள்ளும் உரிமத்தில் 10'x10' அளவுள்ள தார்சு கடை ஒன்றுக்கு ரூ.10.00 என உள்ளதை ரூ.6.00 என திருத்தம் செய்ய முடிவு செய்யப்பட்டது.

ஏல இனம் எண்.27 மற்றும் 28 வ.உ.சி. பூங்கா நுழைவுக்கட்டணம் வசூலித்தல் நுழைவுக்கட்டணம் பெரியவருக்கு ரூ.5.00 என உள்ளதை ரூ.3.00 என திருத்தம் செய்ய முடிவு செய்யப்பட்டது.

குழுவின் பரிந்துரையின்படி பொது ஏல அறிக்கையில் திருத்தம் செய்து மீண்டும் மாமன்றத்தின் அங்கீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

மேலும் இம்மாநகராட்சி மண்டலம் 2-ற்குட்பட்டபெரிய சேமூர் பழைய நகராட்சி எல்லைக்குட்பட்ட சாலை ஓரங்களில் நடைபெறும் சந்தையில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் மற்றும் மாநகராட்சி பேருந்து நிலைய புதிய வணிக வளாக தரைத்தளப் பகுதி (செல்லுலார்) இரு சக்கர வாகனம் நிறுத்துமிடத்தில் கட்டணம் வசூலித்துக் கொள்ளும் உரிமம் ஆகியவற்றின் உரிமக்காலம் 31.03.2013-ல் முடிவடைவதால் மேற்கண்ட இனங்களையும் பொது ஏல அறிக்கையில் சேர்த்து ஏலம் விட மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:-

1) அனுமதி வழங்கலாம்.

2) வணக்கத்திற்குரிய மேயர், மரியாதைக்குரிய துணை மேயர் மற்றும் மண்டல தலைவர்களின் குழுவின் பரிந்துரையை பொது ஏல அறிக்கையில் திருத்தம் செய்து ஏல அறிவிப்பு வெளியிட மாமன்றம் அனுமதிக்கலாம்.

அ1/6100/12

**388. 2013–2016 மூன்றாண்டுகளுக்கான உரிமை இனங்களின் பொது ஏல அறிக்கையில் உள்ள அட்டவணையில் வரிசை எண்.26ஐ பொது ஏலத்தில் இருந்து நீக்கம் செய்ய தீர்மானிக்கப்பட்டது.**

**அயிட்டம் II–ல் தினசரி சந்தையில் வசூலிக்க வேண்டிய சந்தைக் கட்டணம் மற்றும் கடைகளுக்கான கட்டண விவரங்களில் வரிசை எண்.8–ல் மூட்டைக்கு என உள்ளதை காம்ப்ளக்ஸ் மூட்டைக்கு என மாற்றம் செய்ய தீர்மானிக்கப்பட்டது.**

**தேங்காய் மற்றும் தக்காளி ஆகியவைகளை கொண்டு வரும் விவசாயிகளிடம் அரசு வழங்கியுள்ள விவசாயிகளுக்கான அடையாள அட்டை கொண்டு வரும் விவசாயிகளிடம் கட்டணம் இலவசமாகவும், வியாபாரிகளிடம் கட்டணம் வசூலித்துக் கொள்ளவும் முடிவு செய்ய தீர்மானிக்கப்பட்டது.**

12) இம்மாமன்றம் தனது 29.03.12-ம் தேதிய 363-ம் எண் தீர்மானத்தில் கனிமார்க்கெட் வணிக வளாகம் விரிவாக்கம் திட்டப்பணிக்கு தமிழ்நாடு உள் கட்டமைப்பு அபிவிருத்தி சேவை நிதிக்கழகத்தின் மூலம் விரிவான திட்ட அறிக்கை தயார் செய்வதற்கு அனுமதி வழங்கி உள்ளது. அதன்படி தாராஷா தனியார் திட்ட ஆலோசக நிறுவனத்தார் திட்ட வரைபடம் தயாரித்து வழங்கியுள்ளார்கள். மேற்படி திட்ட வரைபடம் மாமன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

மாமன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.

இ1/10761/10

**389. கனி மார்கெட் வணிக வளாகத் திட்டப்பணிக்கும் தாராசா தனியார் திட்ட ஆலோசக நிறுவனத்தார் தயாரித்து வழங்கியுள்ள திட்ட வரைபடத்தை அங்கீகரிக்க தீர்மானிக்கப்பட்டது.**

13) ஈரோடு மாநகராட்சி பகுதியில் அன்றாடம் சேகரமாகும் திடக்கழிவுகள் துப்புரவுப் பணியாளர்களைக் கொண்டு சேகரிக்கப்பட்டு, கலவை உரக்கிடங்கிற்கு எடுத்துச் செல்லப்படுகிறது. திடக்கழிவுகளை சேகரித்து அப்புறப்படுத்தும் பணியினை முழு அளவில் செய்திட போதிய பணியாளர்கள் இல்லாததால் அன்றாடம் சேகரமாகும் திடக்கழிவுகளை அகற்ற மிகவும் சிரமமான நிலை உள்ளது. எனவே ஈரோடு மாநகராட்சியில் கீழ்காணும் வார்டுகளில் சேகரமாகும் திடக்கழிவுகளை அகற்றும் பணியினை தனியாரிடம் ஒப்படைக்கலாம்.

| | |
|---|---|
| மண்டலம்-1 | வார்டு எண்.2, 3, 6, 8 |
| மண்டலம்-2 | வார்டு எண்.17, 26, 28, 30 |

மண்டலம்-3 வார்டு எண்.31, 32, 33, 34

மண்டலம்-4 வார்டு எண்.46, 50, 55, 56

மேற்கண்ட வார்டுகளில் இப்பணியினை அத்தியாவசியப்பணியாக கருதி, திடக்கழிவுகளை அகற்ற தனியார் மூலம் பணிகள் மேற்கொள்ளவும், அதற்கான ஏற்படும் செலவினங்களை சம்மந்தப்பட்ட மண்டலங்களே மேற்கொள்ள அனுமதிக்கும் மாமன்ற பொருள் ஒப்புதலுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது

**அலுவலகக் குறிப்பு:**

மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**எச்1/282/13**

**390. அனுமதி வழங்கப்பட்டது.**
**27ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி.இராதாமணிபாரதி அவர்கள் ஆட்சேபனை செய்தார்.**

**14) 3வது மண்டலத் தலைவர் திரு ஆர்.மனோகரன் அவர்களால் கொண்டுவரப்பட்ட தீர்மானங்கள்**

1) ஈரோடு மாநகராட்சி 44 வது வார்டுக்குட்பட்ட பெரியார் நகர் சிதம்பரம் காலனி அருகில் உள்ள நகராட்சி புனல்டேங் பகுதியில் உள்ள காலியிடத்தில் மாநகராட்சி ஆணையாளர் அவர்களுக்கு குடியிருப்பு வசதி செய்ய இம்மாமன்றம் தீர்மானிக்கிறது..
2) ஈரோடு மாநகராட்சி 44வது வார்டுக்குட்பட்ட பெரியார் நகர் சிதம்பரம் காலனி அருகில் உள்ள நகராட்சி புனல்டேங் அருகில் உள்ள காலியிடத்தில் மற்ற மாநகராட்சியில் உள்ளது போல் வரும் V.I.P களுக்கு I.A.S மற்றும் உயர் அதிகாரிகள் தங்குவதற்கு ஏற்றால் போல் தங்கும் விடுதி அமைக்க இம்மாமன்றம் தீர்மானிக்கிறது..
3) தற்போது ஈரோடு மாநகராட்சிக்கு உட்பட்ட காளைமாடு சிலை அருகில் உள்ள ஆணையாளர் அவர்களின் குடியிருப்பு இல்லம் சுமார் 100 ஆண்டுகளுக்கு மேலாக மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளதால் அதை இடித்து விட்டு ஈரோடு மாநகராட்சிக்கு நன்கு வருமானம் பெருகும் வகையில் ஷாப்பிங் காம்பளக்ஸ், ஹோட்டல் தங்கும் விடுதி (குறிப்பு: ஈரோடு ரயில் நிலையம் அருகில் உள்ள காரணத்தால்) அமைக்க இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

**391. 3ஆவது மண்டலத் தலைவர் திரு.ஆர். மனோகரன் முன்மொழிய 2ஆவது மண்டலத் தலைவர் திரு.பி.கேசவமூர்த்தி அவர்கள் வழிமொழிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**

**15) 7-வது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு எஸ்.செல்வன் அவர்களால் கொண்டுவரப்பட்ட தீர்மானங்கள்**

1) 36, வைராபாளையம் கிராமம், காவேரிக்கரையில் கடந்த 2007-ம் ஆண்டு பொதுப்பணித்துறை அதிகாரிகளால் அனைத்து வீடுகளும் காலி செய்ய உத்திரவிட்டனர். மாவட்ட ஆட்சியாளராக இருந்த திரு உதயசந்திரன் அவர்கள் மாற்று இடம் தருகிறோம் என மாற்று இடம் காண்பித்தார். அந்த இடம் சலவை தொழிலுக்கு ஏற்றவாறு இல்லை என்று கூறினோம். நாங்கள் அருகாமையில் மேடான பகுதியில் இருக்கும் இடத்தை நாங்களே தேர்வு செய்து ஆட்சியரிடம் கூறினோம். மாவட்ட

ஆட்சியர் பண்டு ஏதும் இல்லை. அடிப்படை வசதிகள் அனைத்தும் செய்து தருகிறோம் என கூறினார். பின்னர் மாவட்ட ஆட்சியர் மாறுதலில் சென்று விட்டார். காவேரிக்கரை அருகாமையில் மேடான பகுதியில் பொதுமக்கள் பங்களிப்பில் இடத்தை வாங்கி அதில் வீடுகளும் கட்டினோம். கட்டியவீட்டிற்கு செல்ல மெயின் சாலை வசதி இல்லை. மேற்படி சாலை வெண்டிபாளையம் மின் கதவணையில் நீர் தேக்கம் செய்து விட்டனர். இதனால் பள்ளி குழந்தைகள் தினமும் இடுப்பளவு தண்ணீரில் தான் பள்ளிக்கு சென்று வருகின்றனர். ஆகவே எங்களுக்கு காவேரிக்கரை முனியப்பன் நகருக்கு செல்ல மின்மயானம் எதிரில் மற்றும் ராகவேந்திரா சுவாமி கோயில் ரோடு மற்றும் சோழீஸ்வரர் கோயில் எதிரில் இந்த மூன்று இடங்களில் ஏதாவது ஒரு இடத்தில் எங்களுக்கு சாலை அமைத்து கொடுக்க இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

2) காவேரிக்கரை முனியப்பன் நகர் பொது மக்கள் ஆற்றுக்கு சென்று குளிப்பதற்கு 30அடி தூரம் படித்துறை கட்டி கொடுக்க இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

**392. 7ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு. எஸ். செல்வன் அவர்கள் முன்மொழிய 1ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு. பி. முத்தான் அவர்கள் வழிமொழிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**

**16) 33வது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி ஜி.ராதா அவர்களால் கொண்டுவரப்பட்ட தீர்மானங்கள்**

1) புதுக்காலனி, காரப்பாறை மற்றும் காமராஜர் நகர் நாடார் காலனி ஆகிய வீதிகளில் உள்ள பழுதடைந்துள்ள மின்கம்பங்களை மாற்றி தருமாறு இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
2) புதுக்காலனி, பி.கே.என். நகர், வித்யா நகர், பிருந்தா நகர் பிரன்ட்ஸ் அப்பாட்மெண்ட் வீட்டு லைன் ஆகிய வீதிகளில் உள்ள மின்விளக்குகளில் வீதி விளக்குகள் பொருத்தி தர இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
3) புதுக்காலனியில் நூலகம் மற்றும் பூங்கா ஒன்றும் மெடிக்கல் நகர் பகுதியில் பூங்கா ஒன்றும் அமைத்துதர இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
4) காரப்பாறை கழிப்பிடத்தில் அருகே உள்ள போர்வெல் மின்மோட்டாரை 5எச்.பி ஆக மாற்றி தர கொடுக்க இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
5) திண்டல் பகுதியில் வேளாளர் கல்லூரி அருகில் சுரங்க நடைபாதை அமைத்து தர இம்மன்றம் தீர்மானிக்கிறது
6) திண்டலிருந்து பழையபாளையம் வரை மேம்பாலம் ஒன்று அமைத்து தர இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
7) கீழ்திண்டல் வாய்க்கால் ரோடு அருகிலிருந்து புஷ்பநாதன் ஆசிரியர் வீடு வரை மழை நீர் வடிகால் மற்றும் புதிய தார் ரோடு அமைக்கவும் மற்றும் டைமண்ட் நகர் தார் ரோட்டில் கடையிலிருந்து டைமண்ட் நகர் கழிப்பிடம் வரை தார்சாலை அல்லது கான்கிரீட் சாலை அமைக்க இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

**393. 33ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி. ஜி. ராதா அவர்கள் முன்மொழிய 32ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு. ஆர். இளங்கோ அவர்கள் வழிமொழிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**

**17) 3வது மண்டலத்தலைவர் திரு ஆர்.மனோகரன் மற்றும் 46-வது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு எம்.ஈஸ்வரமூர்த்தி ஆகியோர்களால் கொண்டுவரப்பட்ட தீர்மானம்**

ஈரோடு மாநகர எல்லைக்குள் வணக்கத்திற்குரிய மேயர் மற்றும் மரியாதைக்குரிய துணை மேயர் ஆகியோர்களுக்கு குடியிருப்புகள் கட்ட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

**394. 3ஆவது மண்டலத் தலைவர் திரு. ஆர். மனோகரன் மற்றும் 46ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு. எம். ஈஸ்வரமூர்த்தி ஆகியோர் முன்மொழிய 2ஆவது மண்டலத் தலைவர் திரு. பி. கேசவமூர்த்தி அவர்கள் வழிமொழிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**

இடம்–ஈரோடு                                        மேயர்,
நாள்– 30.01.2013                                  ஈரோடு மாநகராட்சி.